செ.வெ. எண் : 308 நாள் 27.05.11

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 27.5.2011

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிபாறை, பெருஞ்சாணி, சித்தார் – I மற்றும் சித்தார் - II ஆகிய நீர்த்தேக்கங்களில் 26.5.2011 அன்றைய நிலவரப்படி 4871 மில்லியன் கன அடி (4.9 TMC ft.) தண்ணீர் இருப்பு உள்ளது.

இந்த ஆண்டில் (2011–2012) கோதையாறு மற்றும் கோதையாறு பட்டணங்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தார் – I மற்றும் சித்தார் – II ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து கோதையாறு மற்றும் கோதையாறு பட்டணங்கால் பாசன அமைப்பின் கீழுள்ள பாசன சாகுபடிக்காக 1.6.2011 முதல் 28.2.2012 வரை தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை, அகஸ்தீஸ்வரம், கல்குளம் மற்றும் விளவங்கோடு வட்டத்திலுள்ள சுமார் 79,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1/1

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

Comp1/Water release